தினமலர்
30.11.2019 , Page No - SP3

# கே.பி.ஆர்., கல்லூரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்




**கோவை, நவ. 30–**

கே.பி.ஆர்., பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி மற்றும் எமுர்கோ அகாடமி, 'பிளாக் செயின்' தொழில்நுட்பத்தை மையமாக கொண்டுபுரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.

'பிளாக் செயின்' என்பது இணைய பாதுகாப்புக்காக உபயோகப்படுத்தப்படும் ஓர் தொழில்நுட்பம். ஆதார் கார்டு, பாஸ்போர்ட் போன்ற ஆவணங்களின் ரகசியங்களை, அரசு இத்தகைய தொழில்நுட்பம் மூலமே பாதுகாக்கிறது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம், கம்ப்யூட்டர் பிரிவு மாணவர்களுக்கு, 'பிளாக் செயின்' குறித்த பாடத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி, வேலை வாய்ப்பு பிரிவுகளின் கீழ் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

நிகழ்ச்சியில், எமுர்கோ அகாடமி துணை தலைவர் விஜய் பாலாஜி இளங்கோ, கல்லூரி முதல்வர் அகிலா, டீன் நடராஜன் ஆகியோர் கையெழுத்திட்டு, ஒப்பந்தத்தை மாற்றிக்கொண்டனர். துறை தலைவர் பாலாஜி, ஆராய்ச்சி இயக்குனர் உஷா, வேலைவாய்ப்பு இயக்குனர் தாமரைக் கண்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.